## மாதிரி வினாத்தாள்

## ஒன்பதாம் வகுப்பு – தமிழ் முதல்தாள்

**காலம்: 2 மணி நேரம்** **மதிப்பெண்: 60**

**அ. பலவுள் தெரிக** (10×1=10)

1. கூலம் என்னும் சொல் குறிக்கும் பொருள்
   i) தானியம் ii)மானியம் iii)வாணிகம் iv)நாணயம்
2. தமிழ்மொழி தாயென ஏந்தி வளர்த்ததாகக் கவிஞர் தமிழன்பன் கூறுவது………
   i)இலக்கணங்கள் ii)காப்பியங்கள் iii)இலக்கியங்கள் iv)சமயங்கள்
3. இணைய இணைப்பு இல்லாத மின்னணு இயந்திரம்
   i)தானியக்கப்பண இயந்திரம் ii)பேருந்துப் பயணச்சீட்டு வழங்கும் இயந்திரம் iii)திறனட்டை பயன்படுத்தும் இயந்திரம் iv)தொலைநகல் இயந்திரம்
4. பொருத்தமான விடையைத் தேர்க.
   அ)நீரின்று அமையாது உலகு – திருவள்ளுவர்
   ஆ)நீரின்று அமையாது யாக்கை – ஔவையார்
   இ)மாமழை போற்றுதும் – இளங்கோவடிகள்
   i)அ, இ ii)ஆ, இ iii)அ, ஆ iv) அ, ஆ, இ
5. தமிழர் பண்பாட்டின் அடையாளம்
   i)கற்களை எறிந்துக் காளையை அடக்குதல்
   ii) அன்பையும் வீரத்தையும் பயன்படுத்திக் காளையின் திமிலைத் தழுவுதல்
   iii)காளையின் முதுகில் ஈட்டிகளை எறிதல்
   iv)வன்மத்தையும் போர் வெறியையும் வெளிப்படுத்திக் காளையை அடக்குதல்
6. சந்து இலக்கியம், வாயில் இலக்கியம் என்று அழைக்கப்படும் இலக்கியவகை ______
   i)உலா ii)குறம் iii)தூது iv)பள்ளு
7. மாவி ரைத்தெழுந் தார்ப்ப வரைதரு
   பூவி ரித்த புதுமதுப் பொங்கிட
   இவ்வடிகளில் அமைந்துள்ள எதுகைச் சொற்கள் ______________
   i)மாவிரைத்தெழுந்து - பூவிரித்த ii) விரைத்தெழுந்து – விரித்த புதுமது iii) ஆர்ப்ப – புதுமது iv)வரைதரு - பொங்கிட
8. ஒருவரது பெருமையையும் சிறுமையையும் அறிய உதவும் உரைகல் _______________
   i)நோக்கங்கள் ii)எண்ணங்கள் iii)விருப்பங்கள் iv)செயல்பாடுகள்
9. சோழர் காலத்தில் ஏரியில் சேற்றையும் நீரையும் வெளியேற்றப் பயன்படுத்தப்பட்ட தொழில்நுட்பம் ______
   i)குமிழித்தூம்பு ii)மதகு iii)கற்சிறை iv)கழிமுகம்
10. நீறு எடுப்பவை, நிலம் சாடுபவை என்று கலித்தொகையில் குறிப்பிடப்படுவது ________
   i)குதிரை ii)காளை iii)நாய் iv) பசு

**ஆ. பொருத்துக** (4×4=4)

11. அகழ்வாரைத் தாங்கும் நிலம் – மந்தி, பிடி
12. கடுவன், களிறு – அறிவை மறந்த உணர்ச்சி
13. திரியை மறந்த தீ – பணமற்ற வணிக முறை
14. திறனட்டை – இகழ்வார்ப் பொறுத்தல் தலை

**இ. ஓரிரு வரிகளில் விடையளிக்க. (ஆறனுக்கு மட்டும்)** (6×2=12)

15. களை பறிக்கும் பருவத்தினை உழவர் எவ்வாறு அறிவர்?

16. தொல்காப்பியர் குறிப்பிடும் மூவறிவு, நான்கறிவு, ஐந்தறிவு உயிர்களுக்கு எடுத்துக்காட்டு தருக.

17. "பசியும் பிணியும் பகையும் நீங்கி
வசியும் வளனும் சுரக்க! என வாழ்த்தி"
– வாழ்த்துபவர் யார்? வாழ்த்தப்படுபவர் யார்?

18. நீங்கள் வளர்க்கும் இரண்டு செடிகளின் பெயர்களைக் குறிப்பிட்டு அவற்றை எவ்வாறு வளர்க்கிறீர்கள் என்பதை எழுதுக.

19. திறனட்டைக் கருவி பற்றி நீங்கள் அறிந்தவற்றை குறிப்பிடுக.

20. தமிழநாட்டின் ஏறுதழுவுதலுக்கும் மேலைநாட்டின் காளை விளையாட்டிற்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?

21. தென்னிந்திய மொழிகள் சிலவற்றின் பெயர்களைப் பட்டியலிடுக.

22. நீங்கள் வாழும் பகுதியில் உள்ள இன்றைய நீர்நிலைகளுள் ஒன்றைப் பற்றி எழுதுக.

**ஈ. ஆறு வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க** (நான்கனுக்கு மட்டும்) (4×4=16)

23. "குறம்என்றும் பள்ளுஎன்றும் கொள்வார் கொடுப்பாய்க்கு
உறவுஎன்று மூன்றுஇனத்தும் உண்டோ – திறம்எல்லாம்
வந்துஎன்றும் சிந்தா மணியாய் இருந்தஉனைச்
சிந்துஎன்று சொல்லிய நாச்சிந்துமே"
i)இப்பாடல் இடம்பெற்றுள்ள நூல் எது?
ii)இப்பாடலில் காணப்படும் சிற்றிலக்கிய வகைகள் யாவை?
iii)சிந்தாமணி – இருபொருள் தருக.
iv)பாடலில் இடம்பெற்றுள்ள அடியெதுகைச் சொற்களை எடுத்தெழுதுக.

24. நிலத்தடி நீரை எவ்வாறெல்லாம் சேமிக்கலாம்?

25. இடம் சுட்டிப் பொருள் விளக்குக.
'காடெல்லாம் கழைக்கரும்பு காவெல்லாம் குழைக்கரும்பு'

26. தானியக்கப் பண இயந்திரத்தில் எவ்வாறு பணம் எடுப்பீர்கள்?

27. அரிக்கமேடு, ஆதிச்சநல்லூர், கீழடி ஆகிய இடங்களில் நடந்த அகழாய்வுகள் தரும் செய்திகள் யாவை?

28. தமிழருக்கும் நீராடலுக்கும் உள்ள தொடர்பை எழுதுக.

**உ. பத்து வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க** (2×6=12)

29. பால்பாகுபாட்டின் அடிப்படையில் தமிழையும் பிறமொழிகளையும் ஒப்பிடுக.

அல்லது

தமிழக அரசு இணையவழியில் மாணவர்களுக்கு வழங்குகின்ற நலத்திட்டங்களை விளக்குக.

30. சமகாலத் தோழர்களை விளித்துக் கூறும் கவிஞரின் விருப்பங்களை விவரிக்க.

அல்லது

இந்திர விழாவைக் காணவந்தோர் பற்றி மணிமேகலை விவரிப்பதை உங்களுடைய நடையில் வருணித்து எழுதுக.

**ஊ. அடிபிறழாமல் எழுதுக.** . (2+4=6 )

31. எவ்வளவு சிறிதானாலும் நல்லவற்றைக் கேட்டால் கேட்ட அளவுக்குப் பெருமை உண்டாகும் என்று பொருள்படும் குறளை எழுதுக.

32. 'நீர்இன்று ….' என்று தொடங்கி, '… படைத்திசினோரே' என்று முடியும் புறநானூற்றுப் பாடலை எழுதுக.